**வளர்தமிழ் - 4** **25-04-2020**

**பாடம் 3 - அக்காவுக்கு ஒரு மடல் - வாசிப்போம்**

**1) விடை சொல்வோம்**

1. அஞ்சல் எந்த நாட்டில் இருந்து எழுதப்பட்டது?

2. எவை போதிய அளவு கிடைக்கின்றனவா என்று கேட்கப்பட்டிருந்தது?

3. யாருக்கு நீண்டநாட்களாக உடல்நிலை சரியில்லை?

4. என்ன தட்டுப்பாடாக இருந்தது?

5. அக்காவும்,தம்பியும் எதில் கண்ணாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது?

**2.பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. இளந்திரையன் நலம் அறிய ஆவல்பட்டான்.ஆவல் என்பது ----------

1. பெருவிருப்பு 2. ஆசை 3.பெருமதிப்பு

2. நாங்கள் சென்ற வருடம் சுற்றுலா சென்றோம்.சுற்றுலா எனப்படுவது -----------

1.உலாவுதல் 2. சுற்றம் 3. காணுலா

3.  90 என்று இலக்கத்தை எழுத்தில் எழுதினால் ------------

1.தொந்நூறு  2.தொண்ணூறு  3.தொன்னூறு

4.  பசுமையான புல்வெளியில் "ஆ" மேய்கின்றது ஆ -------------

1.எருமை  2.ஆடு  3.பசு

5.  கடந்த ஒரு மாதகாலம் பாடசாலை -------------

1.செல்வேன்  2.செல்கிறேன்  3.செல்லவில்லை

**நாலடியார் :  நல்லார் எனத்தாம் நனிவிருப்பிக்---------------- பாடமாக்கவும்.**

**3. சொற்பொருள் கூறுவோம்.**

1.  அகத்தியம்  ---------------------

2.  அருவெறுப்பு ------------------

3.  அரவணைப்பு -----------------

4.  குறிக்கோள் -------------------

5.  சுற்றம் ----------------------------

6.  பட்டறிவு -------------------------

**4. பொருத்தமான முடிக்கும் சொற்களை  எழுதி சொல்லியங்களை நிறைவு செய்க.**

1.  வேப்பஞ்சாறு பல்லில்  உள்ள கிருமிகளை --------------

2. எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்பட ---------------

3. பூவுடன் சேர்ந்த நாரும் ------------- (பழமொழி )

4. பொழிலன் மேடையில் நிகழ்ச்சி நிரலை --------------

5. தென்னை (தெங்கு) ஓர் பயனுள்ள -------------

**5.கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்கள் சரியானால் (✓)என்றும் பிழையானால் (✕) என்றும் குறியீடு இடுவோம்.**

1. கதை கூறும் வழக்கம் தமிழர் பண்பாட்டில் காலங்காலமாக நிலவுகிறது. ( )

2. கூட்டு முயற்சியால் பயனில்லை ( )

3. ஒற்றுமையே உயர்வு தரும் ( )

4. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது ( )

5. பழங்கள், காய்கறிகளை விரும்பி உண்ணக்கூடாது ( )

**6. வாசிப்போம் - உணவு**

**பேசுவோம் - அம்மி , ஆட்டுக்கல் , உரல் ,**

**7. எழுதுதல் நூல், அலகு - 3 பயிற்சிகளை மீட்டல் செய்வோம்.**

# அம்மி, ஆட்டுக்கல், உரல்

- தாயகத்தில் எல்லா வீடுகளிலும் அம்மி, ஆட்டுக்கல், உரல் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- அம்மியில் துவையல் (சம்பல்) அரைப்பர்.
- அரிசி, உழுந்து போன்றவற்றை ஊறவைத்து ஆட்டுக்கல்லில் அரைப்பர்.
- அரைத்த அரிசி, உழுந்தில் தோசை சுடுவர். இட்டலி அவிப்பர்.
- அரைத்த உழுந்தில் வடை சுடுவர்.
- உரலில் அரிசி இட்டு உலக்கையால் இடிப்பர்.
- அரிசி மாவில் இடியப்பம், பிட்டு அவிப்பர்.
- திரிகையில் பயறு, உழுந்து போன்றவற்றைத் திரிப்பர்.
- அம்மி, ஆட்டுக்கல், திரிகை போன்றன கருங்கல்லினால் செய்யப்படுகின்றன.
- உரல் கருங்கல்லினாலும் மரத்தாலும் செய்யப்படுகின்றது.